# தமிழ்நாடு அரசு வனத்துறை

அனுப்புநர்,

திரு. மா.கோ. கணேசன், இ.வ.ப.,
திட்ட இயக்குநர் (கூ.பொ),
நீலகிரி வரையாடு திட்டம்,
கோயம்புத்தூர்.

பெறுநர்,

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்.

---

**ந.க.எண். 592/2025/PNT, நாள். 12.09.2025**

ஐயா,

| | | |
|---|---|---|
| பொருள் | : | வனம் - நீலகிரி வரையாடு திட்டம், - நீலகிரி வரையாடு தினம் அக்டோபர் 7th, 2025 – பள்ளி மாணவ மாணவியர்களுக்கு ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்துவது – தொடர்பாக |
| பார்வை | : | சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை (FR.5) நீலகிரி வரையாடு திட்டம் G.O. (MS). எண். 222 தேதி. 28.12.2022 |

***********

மேற்காண் பொருள் தொடர்பாக, நமது மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளை, பாதுகாக்கும் நோக்கத்துடன் அக்டோபர் 7, ஆம் தேதியன்று நீலகிரி வரையாடு தினமாக ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டுகிறது. இந்த ஆண்டு வருகின்ற ஆட்டோபர் 7ஆம் தேதி நீலகிரி வரையாடு தினத்தினை சிறப்பாக கொண்டாடும் விதமாக, இளம் தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு மாநில அளவிலான ஓவியப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்த நீலகிரி வரையாடு திட்டம் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களும் பள்ளிகளுக்கு சுற்றிக்கை மூலம் தெரியபடுத்தி மாணவ – மாணவிகள் திரளாக பங்கு பெற வழிவகை செய்யமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

போட்டிகள் மற்றும் பிரிவு விபரங்கள் பின்வருமாறு.

**ஓவியப் போட்டிக்கான தலைப்பு**

**"நீலகிரி வரையாடு மற்றும் அதன் வாழ்விடம்"**

**ஓவியப் போட்டி பிரிவு விபரங்கள்.**

பிரிவு - அ – ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை.

பிரிவு - ஆ – ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை.

ஓவியப் போட்டிக்கான விதிமுறைகள்.

- வரையப்படும் ஓவியம் போட்டியாளர்களால் மட்டுமே வரையப்பட வேண்டும்.
- வரையப்படும் ஓவியம் கருமை அல்லது வண்ண ஒவியங்களாக இருக்கலாம்
- வரையப்படும் ஓவியம் சுயமானதாக இருக்கவேண்டும்.
- வரையப்படும் ஓவியம் ஓவியப் போட்டிகான தலைப்பின் கருத்தினை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.

**பேச்சுப் போட்டிக்கான தலைப்பு (Elocution Contest)**

**"நீலகிரி வரையாடிற்கான குரல்"**

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள்**

- எட்டாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை.
- தனி நபராகவோ அல்லது இரண்டு அல்லது முன்று நபர்கள் கொண்ட குழுவாகவோ இணைந்து பதிவு செய்து காணொலில் இருக்கலாம்.
- பதிவு காணொலி 2 நிமிடங்களுக்கு உள்ளதாக இருக்க வேண்டும்.
- பதிவு செய்யப்பட வேண்டிய காணொலி தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருக்காலம்.

மேற்படி கொடுக்கப்பட்ட தலைப்பின்படி ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகளை பங்கு பெறும் மாணவர்களின் பெயர், வகுப்பு, பள்ளி பெயர், முகவரி மற்றும் கைபேசி எண் போன்ற விபரங்களுடன் **திட்ட இயக்குநர், நீலகிரி வரையாடு திட்டம், கோயம்புத்தூர் -43 என்ற முகவரிக்கும் மற்றும் மின்னஞ்சல் முகவரி – nilgiritahrday2025@gmail.com -க்கும்** 01.10.2025 தேதியன்று மாலை 5.00 மணிக்குள் போட்டியாளர்கள் தங்கள் பள்ளியின் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டும். காலதாமதமாக அனுப்பப்படும் ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகள் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. ஓர் பள்ளியிலிருந்து ஒவ்வோரு தலைப்பின் கீழ் தாங்களே முதல், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் (அறுதல் பரிசு) பரிசு பெறுகின்ற போட்டியாளர்களை தேர்ந்தெடுத்து மேற்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும், இவ்வாறு அனுப்பப்படுகின்ற போட்டியாளர்களிலிருந்து நீலகிரி வரையாடு திட்டத்தின் மூலம் முதல், இரண்டம் மூன்றாம் மற்றும் நான்காம் இடம் பெறும் போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்ற வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் நேரடியாக வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படுகின்ற போட்டியாளர்களின் விவரம் மற்றும் நிகழ்ச்சி நடைபெறுகின்ற விவரங்கள் சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு நேரடியாக தெரிவிக்கப்பட்டு கலந்துகொள்ள அறிவுறுத்தப்படுவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துகொள்கிறேன்.

ஓம்/- ம.கோ.கணேசன்,
திட்ட இயக்குநர்,
நீலகிரி வரையாடு திட்டம்,
கோயம்புத்தூர்.

// உண்மை நகல் / உத்தரவின் படி //

உதவி திட்ட இயக்குநர்,
நீலகிரி வரையாடு திட்டம்,
கோயம்புத்தூர்.

**நகல்**

பள்ளிக் கல்வி இயக்குநரகம், DIP வளாகம் கல்லூரி சாலை, சென்னை-600006